

புரட்சிப் பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2052 | அக்டோபர் 14, 2021 | புரட்சி 20 | முழக்கம் 33 | விலை: ரூ.3.00


## திருச்சியில் கொளத்தூர் மணி பேட்டி

# திராவிட எதிர்ப்பு என்ற ‘சொற்சிலம்பு அரசியல்’, மக்களிடம் வெற்றி பெறாது

*தமிழ் நாட்டில் திராவிட எதிர்ப்பு என்ற பெயரில் ஒரு சொல்லை வைத்துக் கொண்டு பெ. மணியரசன், சீமான் போன்றவர்கள் சொற்சிலம்பம் விளையாடும் அரசியல் எடுபடாது என்று கழகத் தலைவர் கொளத்தூர் மணி கூறினார்.*

*மக்களுக்கான அரசியலே தேவை; சொற்சிலம்பு அரசியல் தேவை இல்லை என்றும் குறிப்பிட்டார்.*

*திருச்சியில் பெரியாரிய உணர்வாளர் கூட்டமைப்பின் பொதுக் குழு கூட்டம் நடந்த பிறகு செய்தியாளர்களிடையே திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி பேசினார்.*

பெரியாரிய உணர்வாளர்கள் கூட்டமைப்பின் மூன்றாவது பொதுக்குழு 8.10.2021 அன்று திருச்சியில் கூடியது. கூட்டமைப்பின் பொதுக் குழுவில் எடுக்கப்பட்ட முடிவுகள்.

**வேலைத் திட்டங்கள்:**

1. எதிர்வரும் நவம்பர் 1ஆம் நாள் தமிழ்நாடு விழாவை அனைத்து ஊர்களிலும் கலைவிழா வோடு இணைத்துப் பெருமளவில் கொண் டாடுவது. பெரியாரிய உணர்வாளர்கள் கூட்டமைப்பு கடந்த ஆண்டு அறிமுகப்படுத்திய கொடியை விழாக்களில் அனைவரும் ஏந்தி நிற்பது.
2. பார்ப்பனிய வெறியாட்டங்களுக்கு எதிராகக் கருப்புச்சட்டைப் பேரணி நடத்தியது போல், பார்ப்பனிய - சாதியக் கொடுமைகளுக்கு எதிராக நீலச்சட்டைப் பேரணி நடத்தப்பட்டதுபோல், இந்து - வைதீக வேத புராணக் குப்பைகளுக்கு எதிராகத் திருக்குறள் மாநாடு நடத்தப்பட்டது போல், பாசிச பார்ப்பனியத்திற்கு எதிராக, சனநாயகப் பகைப் போக்குக்கு எதிராக, மாநில உரிமைகள் பறிக்கப்படுவதற்கு எதிராகப் பொது வுடைமைக் கட்சியினரை, பொதுவுடைமைக் கருத்தாளர்களையெல்லாம் ஒருங்கிணைத்து, பாசிச பாஜக வே பதவியை விட்டு வெளியேறு என வலியுறுத்திச் ‘செஞ்சட்டைப் பேரணி’யை யும் பெரியாரிய உணர்வாளர்கள் கூட்டமைப்பு எதிர்வரும் 2022 பிப்ரவரி அல்லது மார்ச்சு மாதத்தில் மதுரையில் நடத்துவது.

**தீர்மானங்கள்:**

1. ஏறத்தாழ ஏழு மாதங்களுக்கும் மேலாக வேளாண் சட்டங்களை எதிர்த்துப் போராடி வரும் விவசாயிகள் குறித்துக் கவலை கொள்ளாமல் அவர்களைக் கடுமையாக ஒடுக்கி வரும் இந்திய ஒன்றிய பாஜக அரசை வன்மையாகக் கண்டிக் கிறோம். மேலும் விவசாயிகள் மீது வண்டியை மோதியும் துப்பாக்கியால் சுட்டும் கொலை செய்த ஆசிஸ் மிஸ்ராவுக்குப் பிணை மறுத்து சிறைக் காவலில் வைக்க வலியுறுத்துகிறோம்.
2. நீட் தேர்வை என்ன காரணம் கொண்டும் இனி அனுமதிக்கக் கூடாது எனவும், கல்வித் துறை அதிகாரங்கள் முழுமையாகத் தமிழ்நாட்டு அரசிடமே இருக்கும்படி ஆவன செய்ய வேண்டும் எனவும் வலியுறுத்துகிறோம்.
3. எழுவர் விடுதலையைத் தமிழ்நாடு அரசே தன் அதிகாரத்தைக் கொண்டு அறிவிக்க வேண்டும் என வலியுறுத்துகிறோம்.
4. ஆட்சிக்கு வந்த 5 மாதங்களில் தமிழ்நாடு அரசு நிறைவேற்றியிருக்கிற அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆகும் அறிவிப்பும், தமிழ்வழியில் படித்தவர்க்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை என்கிற தொடக்க நிலை அறிவிப்பும், சமூக நீதி நாள் அறிவிப்பும், புலம்பெயர் தமிழர் நல வாரியம் அமைத்ததோடு சனவரி 12ஆம் நாளை புலம்பெயர் உலகத் தமிழர் நாள் அறிவிப்பும் பெரியாரிய உணர் வாளர்கள் கூட்டமைப்பால் வரவேற்கப்படுகின்றன.
5. குமரி மாவட்டத்தில் கனிம வளங்களைச் சூறையாடிவரும் செயல்பாடுகளில் உடனடியாகத் தமிழ்நாடு அரசு தலையிட்டு நிறுத்தம் வேண்டும்..
6. சாதி மறுப்புத் திருமணம் செய்து கொண்டவர்களுக்குத் தக்க பாதுகாப்பும், சாதி இல்லை என்கிற பதிவின்படி இட ஒதுக்கீடும் தருவதோடு ஆணவப் படுகொலைகளுக்கு எதிராகச் சட்டப் பாதுகாப்பும் கடும் நடவடிக்கைகளும் தேவை என்பதையும் வலியுறுத்துகிறோம்..
7. பெரியாரிய உணர்வாளர்கள் கூட்டமைப்பின் நடுவத் தலைமைக் குழு உறுப்பினரான தோழர் குடந்தை அரசன் அவர்களைத் தேடிக் கடந்த 7.10.2021 அன்று காவல் துறையினர் அவர் வீட்டிற்குச் சென்றதுடன், அவரின் தம்பியையும் மிரட்டிக் கைது செய்ய முனைந்திருக்கின்றனர். தேவையற்ற நிலையில், ஏதோ பிற தூண்டலின் காரணமாகக் காவல்துறையினர் எடுத்திருக்கிற இந்த நடவடிக்கையைப் பெரியாரிய உணர்வாளர்கள் கூட்டமைப்பு மறுக்கவும், கண்டிக்கவும் செய்கிறது. இப்போக்கை அரசு கைவிட வேண்டும் என்றும் கூட்டமைப்பு வலியுறுத்துகிறது.
8. தமிழ்நாட்டில் ஈழத்தமிழர்கள் அடைக்கப் பட்டுள்ள முகாம்களில் உள்ளவர்களில் தமிழீழ நாடு திரும்ப விரும்புவர்களுக்குத் தேவையான உதவியைத் தமிழ்நாடு அரசு செய்ய வேண்டும். சிறப்பு முகாம்களைக் கலைக்க வேண்டும். முப்பது ஆண்டுகளாக முகாம்களில் இருப்பவர்கள் உள்ளிட்ட ஈழத்தமிழர்களுக்கு இங்குக் குடியுரிமை வழங்க ஆவன செய்ய வேண்டும். முகாம்களில் உள்ள பிள்ளைகள் மருத்துவம், பொறியியல் உள்ளிட்ட கல்வி பெற வழி யில்லாமலும், சிலர் தனி முயற்சியில் படித்தாலும் வேலை மறுக்கப்படும் நிலையையும் மாற்றிடும் வகையில் தமிழ்நாடு அரசு கவனம் செலுத்த வேண்டும் என வலியுறுத்துகிறோம். மேலும் முகாம்களில் இருக்கும் இணையருக்குப் பிறந்த குழந்தைகள் இங்குத் தமிழ்நாட்டிலேயே பிறந்திருந்தும் அக்குழந்தைகளுக்குக் கூட குடியுரிமை தராமல் இருப்பது உலக ஏதிலியர் சட்டத்தையே மதிக்காத போக்காகும். எனவே தமிழ்நாடு அரசு அதிலும் கவனம் எடுத்து ஆவன செய்ய வேண்டும் என வலியுறுத்துகிறோம்.




## பெண் குழந்தைகளை கங்கையில் மூழ்கடிக்கும் கும்பல்



ஒருமுறை நான் ஆர்எஸ்எஸ் தலைமையகமான நாக்பூரில் இருந்தபோது கவுதம் அதானி அங்கு யோகா பயிற்சி செய்வதைப் பார்த்தேன். மோடி அரசு,பொதுச் சொத்துக்களை தனியாருக்கு கொடுப்பதை எதிர்த்து நாட்டு மக்கள் குரல் கொடுக்கின்றனர். அரசின் திட்டங் கள், முடிவுகள் எங்கிருந்து வருகிறது என்பதை நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும். அது ஆர்.எஸ்.எஸ்.லிருந்து வரும் கட்டளை.

ஒருமுறை நான் இமயமலை அடிவாரத்தில் உள்ள ஆர்எஸ்எஸ் அலுவலகத்தில் இருந்தேன். ஒரு பெண் தனது கைக்குழந்தையுடன் அந்த அலுவலகத்துக்கு வந்து அலுவலகத் தலைவருடன் பேசிக் கொண்டி ருந்தார். கேரளாவைச் சேர்ந்த எனது சக ஊழியர் ஒருவர் என்னிடம் கூறினார், “அந்தப் பெண். அந்தத் தலைவரிடம் தன் குழந்தையை பாதுகாக்க வேண்டும் என்று கெஞ்சுகிறார்” என்று. “பெண் குழந்தைகளைப் பெற்றெடுத்த பட்டியலினப் பெண்களுக்கான வழக்கத்தை இம்முறை வலியுறுத்த வேண்டாம்” என்று. அந்தப் பெண், அந்த ஆர்எஸ்எஸ் தலைவரிடம் இறைஞ்சுகிறார். சரி, அந்தப் பழக்கம் என்னவென்று விசாரித்தபோது அதிர்ச்சியாக இருந்தது. பட்டிய லின சாதியைச் சேர்ந்த ஒரு பெண், பெண் குழந்தை யைப் பெற்றெடுத்தால், அக்குழந்தையை ஆறு மாதங்க ளுக்கு முன் ‘தூய்மைப்’ படுத்த கங்கை நீரில் மூழ்க வைத்து வெளியே எடுக்க வேண்டும். அந்த பெண்மணி ஏற்கனவே நான்கு பெண் குழந்தைகளைப் பெற்றெ டுத்தார். கங்கையில் மூழ்க வைத்து வெளியே எடுத்த தால் குழந்தைகள் அனைவரும் இறந்தனர். எனவே இப்போது ஐந்தாவது முறையாகவாவது சடங்கைத் தவிர்க்க அனுமதிக்குமாறு கெஞ்சுகிறார். ஆனால் சடங்குகள் செய்யப்பட வேண்டும் என்று தலைவர் வலி யுறுத்தினார். காயத்ரி மந்திரத்தை உச்சரித்துக் கொண்டே அப் பெண்மணியை ஆற்றங்கரைக்கு கட்டாயப்படுத்தி அழைத்து வந்தார். அந்த ஆர்எஸ்எஸ் தலைவர் அவர்க ளுடன் நானும் நடந்து கொண்டிருந்தேன். தண்ணீர் மிக வும் குளிராக இருந்ததால் தண்ணீரில் மூழ்க வைத்து வெளியே எடுத்த போது குழந்தை இறந்தது. மூழ்க வைக்கும் முன்பு குழந்தை விளையாடிக் கொண்டிருந் தது, சிறு கைகளைத் தட்டிச் சிரித்துக்கொண்டிருந்தது.

ஆர்எஸ்எஸ் முகாம்களில் கலந்து கொள்ளும் போது எனது திராவிட வேர்கள் காரணமாக நான் பலமுறை துன்புறுத்தப்பட்டேன். துன்புறுத்தலில் இருந்து தப்பிக்க, நான் ஒரு பூணூலை அணிந்தேன். ஆர்எஸ்எஸ்ஸின் சமஸ்கிருதமயமாக்கல் மற்றும் வர்ணமயமாக்கல் கொள்கைக்கு இது எடுத்துக் காட்டு.

**(கேரளாவில் ஆர்.எஸ்.எஸ். அமைப்பிலிருந்து வெளியேறி மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியில் இணைந்துள்ள சுதீஷ் மின்னி, தனது ஆர்.எஸ்.எஸ். அனுபவங்களை நூலாக எழுதியுள்ளார். ‘நரக மாளிகை’ என்று தமிழில் அந்த நூல் வெளி வந்துள்ளது. 2021 செப்.16இல் சென்னையில் நடந்த நூல் வெளியீட்டு விழாவில் அவர் ஆற்றிய உரையின் ஒரு பகுதி.)**

தலையங்கம்

# தமிழும் ‘இந்து’வும் இணையும் புள்ளி எது?

தமிழர்களை இனி ‘தமிழ் இந்து’ என்று அடையாளப்படுத்த வேண்டும் என்று தமிழ்த் தேசப் பேரியக்கத் தலைவர் பெ. மணியரசன் அறிவித்திருக்கிறார். சைவம், வைணவம், நாட்டார் தெய்வங்கள் இந்த அடையாளங்களுக்குள் அடங்கும் என்று அவர் ‘தமிழ் இந்து’வுக்கு அடையாளங்களை வகைப்படுத்தி யிருக்கிறார். ஆரிய இந்துத்துவாவை எதிர்க்க இதுவே சரியான நிலைப்பாடு என்றும் விளக்கம் தருகிறார். ஆனால், அதற்கான விளக்கங்கள் எதையும் அவர் முன் வைக்கவில்லை.

‘ஆரிய இந்துத்துவா’வுக்கு மாற்று ‘தமிழ் இந்துத்துவா’ என்ற அடிப்படையில் தானே இருக்க வேண்டும்? அப்படிக் கூறாமல் மறைப்பது ஏன்? இவரைத் தடுப்பது எது என்று நமக்குத் தெரியவில்லை. பெரியாரையும் அவர் உருவாக்கிய பார்ப்பனிய எதிர்ப்புக் குறியீடான ‘திராவிடர்’ அடையாளத்தையும் தமிழ்நாட்டில் அப்புறப் படுத்துவதையே இலட்சியமாக்கிவிட்ட பிறகு முரண்பாடுகளும் குழப்பங்கள் தானே இந்த அமைப்புகளை வழி நடத்தும்.

‘திராவிடம்’ என்பதே ஆரியச் சொல்; திராவிடம் என்றாலே பார்ப்பனியம் என்று பேசியும் எழுதியும் வந்தது இவர்கள்தான். இப்போது தமிழ் மொழியோடு இணைத்திருக்கும் ‘இந்து’ என்பது மட்டும் தமிழ்ச் சொல்லா? ‘திராவிடமும் தமிழும்’ என்று பேசுவது ‘கருவாட்டுச் சாம்பார்’ என்று கிண்டலடித்தவர்கள் இப்போது ‘தமிழ் இந்து’வை முன்மொழிவதற்குப் பெயர் என்ன? ‘மாட்டுக்கறி சாம்பாரா?’

‘தமிழ் இந்து’ என்று தமிழர்கள் மீது பெ. மணியரசன் சுமத்தும் அடையாளத் துக்குப் பின்னால் பதுங்கி நிற்பது இரண்டு கோட்பாடுகள். ஒன்று – மதம் சார்ந்தது; மற்றொன்று – மண் சார்ந்தது; மதம் சார்ந்து பேசியவர், இறந்து போன காஞ்சி மூத்த சங்கராச்சாரி சந்திரசேகரேந்திர சரசுவதி. மண் சார்ந்து பேசியவர் சாவர்க்கர். சங்கராச்சாரி கூறியது என்ன? சைவம், சமணம், வைணவம், எல்லை அம்மன் பக்தர்கள் என்ற தனித் தனிப் பிரிவினராக ஒருவரையொருவர் எதிர்த்துக் கொண்டிருந்த நிலையில், வெள்ளைக்காரன், ‘இந்து’ என்ற பொது அடையாளம் சூட்டி, நம்மையும் நமது வர்ணாஸ்ரமத்தையும் காப்பாற்றினான். நாம் அவனால் உயிர் பிழைத்தோம் என்றார். இப்போது பெ. மணியரசன், சைவம், வைணவம், நாட்டுப்புற தெய்வங்களை ஒன்றாக்கி, ‘தமிழ் இந்து’ என்ற பொது மத அடையாளத்தை வழங்க முன் வந்திருக்கிறார். இருவரின் நோக்கும் ஒரே நேர்க் கோட்டில் பயணிக்கிறது. இந்து அடையாளத்துக்குள் வந்து விட்ட பிறகு, அதன் உள்ளடக்கமான பார்ப்பனியத்தை – ஜாதியமைப்பை ஏற்றுக் கொண்டுதான் ஆக வேண்டும். ‘தமிழ் இந்து’ – ஜாதியை – பெண்ணடிமையை ஒழித்து விடுமா?

இந்து மதம் என்பதே ஜாதிகளின் தொகுப்புப் பட்டியல் என்றார், அம்பேத்கர். இவர்கள் உயர்த்திப் பேசும் தமிழ் அறிஞர்கள் மறைமலையடிகளும், நாவலர் சோம சுந்தர பாரதியாரும், திரு.வி.க.வும்கூட ‘இந்து’ என்ற சொல்லை ஏற்க மறுத்தார்கள். இப்போது காலத்தின் தேவையால் ‘இந்து’ அடையாளம் தேவைப்படுகிறது என்று வாதிடுகிறார் பெ. மணியரசன். பெரியாரையும் அவரது ஜாதிய பார்ப்பனிய எதிர்ப்புக்கான திராவிடர் அடையாளத்தை பலவீனப்படுத்திடும் நோக்கத்துக்காக – தேவைப்படுகிறது என்கிறாரா என்பது நமக்குப் புரியவில்லை. பா.ஜ.க.வே ‘இந்து’ அடையாளத்தை முன்னிறுத்தி தமிழ்நாட்டில் அரசியல் நடத்த முடியாமல், படுதோல்வி கண்ட பிறகு, திராவிட எதிர்ப்பு காவிரி உரிமை – ஜாதிய அடையாளங்களைக் கையில் எடுத்துக் கொண்டு அரசியல் நடத்துகிறது.

சரி; ‘தமிழ் இந்து’ அடையாளத்தோடு உருவாகும் தமிழ்த் தேசியத்தின் குடிமக்கள் யார்? இந்து அடையாளம் வேண்டாம்; சுயமரியாதை – சமத்துவம் – பெண்ணுரிமை என்ற அடையாளமே வேண்டும் என்ற கருத்துடைய பெரியாரிஸ்டுகள் பொதுவுடைமையாளர்கள் தமிழ்த் தேசிய அடையாளத்துக்குள் வர முடியாதா? பல தலைமுறைக்கு முன் இந்து மதத்துக்கு முழுக்குப் போட்டு வெளியேறிய இஸ்லாமியர், கிறிஸ்தவர், பவுத்தர், ‘இந்து’ அடையாளத்தை ஏற்க வேண்டுமா? தமிழ்த் தேசிய குடிமக்களுக்கான ‘புதிய குடியுரிமைப் பதிவேடு’ ஒன்றை உருவாக்கப் போகிறார்களா? இப்படி பல கேள்விகள் எழுந்து நிற்கின்றன!

இந்து மதம் என்றாலும் இந்தியா என்றாலும் ஒன்று தான் என்றும் இந்தியாவில் வாழும் அனைவரும் இந்துக்களே என்றும் அவர்கள் தாய் மதம் இந்து மதமே – என்றும் ஆர்.எஸ்.எஸ்., பா.ஜ.க. கூறுகிறது. தமிழ்த் தேசியமும் தமிழ் ‘இந்து’வும் ஒன்று தான் என்று பெ. மணியரசன் கூறுகிறார். ஒற்றை ‘இந்தியா’வின் அடையாளம், ‘இந்து’ என்றாலும், ‘ஒற்றைத் தமிழ்த் தேசியத்தின்’ அடையாளம் ‘இந்து’ என்றாலும் இந்தத் தேசியங்கள் மக்களுக்கோ மக்கள் ஒற்றுமைக்கானதோ அல்ல என்பதே நமது உறுதியான கருத்து. சொல்லப் போனால் இது பாசிசத்தை நோக்கிய தேசியம்.

நிலப்பரப்புக்கு மொழி அடையாளம் பொதுவாக ஏற்கப்படுகிறது. ஆனால், மத அடையாளம் மிக ஆபத்தானது. தமிழ்நாடு மற்றொரு ஆப்கானிஸ்தான் ஆக முடியாது. நிலத்தையும் மதத்தையும் இணைப்பது ‘இந்துத்துவம்’. மொழியை இந்த இணைப்புக்கான தடை ஆயுதமாக்க வேண்டுமே தவிர இணைப்புப் பாலமாக்கி விடக் கூடாது. அது நிலத்துக்கு பூசப்படும் மதச்சாயம் தான்; அதையே பெ.மணியரசன் இப்போது பேசுகிறார்.

கடவுள் – மதங்களில் நம்பிக்கை இல்லாத சாவர்க்கர், பல்வேறு மதக் குழுக்களை ஒன்றாக்கி இஸ்லாமியர்களை தனிமைப்படுத்தி, எதிர்க்க மிக தந்திரமாக ‘இந்துத்துவா’ என்ற அரசியல் கோட்பாட்டை நிலத்தின் அடிப்படையில்தான் உருவாக்கினார்.

திராவிடம் பொய்; ஆரியம் தான் உண்மை என்கிறது தமிழ்த் தேசிய பேரியக்கம். அதேபோல் இந்துத்துவா பொய். ஆனால் தமிழ் ‘இந்து’ மெய் என்று இப்போது அதே குரலில் பேசுகிறது. ‘இந்து’ இல்லாவிட்டால் இந்துத்துவம் என்ற ஒன்றே இருக்க முடியாது. ‘தமிழ் இந்து’ என்ற “மெய்யறத்துக்கு” வகுத்துள்ள வரையறை என்ன? தேவாரம், திருவாசகம் ஆதரவோடு முடிந்து விட்டதா? புரோகிதம், வேத சடங்குகள், புறக்கணிப்பு; மக்களை சிந்திக்கவிடாமல் தடுக்கும் மூடத்தன பூஜை முறைகள்; கிராமக் கோயில்களில் தலைவிரித்தாடும் ஜாதிய எதிர்ப்பு, தீண்டாமை எதிர்ப்பு ‘தமிழ் இந்து’வுக்குள் அடங்குமா?

மொழி வழி தேசிய இனத்தை மதவாத தேசியமாக்கும் முயற்சியா? என்ற கேள்விகள் எழுந்து நிற்கின்றன.

ஏற்கனவே இந்து முன்னணி இந்து மக்கள் கட்சி; இந்து தமிழர் கட்சி என்ற பெயரில் பெரியாரையும் பார்ப்பனிய எதிர்ப்பு பேசும் திராவிடத்தை ஏசியும் பேசியும் வருகின்றன. இப்போது அந்த வரிசையில் ‘தமிழ் – இந்து’ பேரியக்கம் வந்திருக்கிறது.

பொதுவுடைமையில் தொடங்கி லெனின் பேசிய தன்னாட்சி உரிமை கோரி, பிறகு தமிழ்த் தேசியமாகி அதற்குப் பிறகு ‘பேரியக்கமாக’ தனக்குத் தானே பெயர் சூட்டிக் கொண்டு – இப்போது ‘தமிழ் இந்து’ அடையாளத்துக்குள் வந்து சேர்ந்திருக்கிறது.

ஒரு நாட்டின் விடுதலைக்கான இலக்கு மக்களுக்கான விடுதலையே தவிர, மதங்களையும் பிற்போக்கு அடையாளங்களையும் சமத்துவத்தை மறுக்கும் பழம் பெருமைகளையும் போற்றிப் பாதுகாப்பது அல்ல.

தமிழ்நாடு ‘ஆர்.எஸ்.எஸ்.’ஸை எதிர்த்துப் போராடும் நிலையில் தமிழ் நாட்டிலேயே ‘தமிழ் ஆர்.எஸ்.எஸ்.’ முளைவிட முயற்சிப்பது கண்டனத்துக்குரியது; இது மக்கள் மன்றத்தில் முறியடிக்கப்படும்!

# அய்.ஏ.எஸ். அதிகாரிகளாக 4 ஆயிரம் ஆர்.எஸ்.எஸ்.காரர்கள்

ஆர்.எஸ்.எஸ். அமைப்பைச் சேர்ந்த 4 ஆயிரம் பேர், இந்திய ஆட்சிப் பணிகளில் சேர்க்கப் பட்டுள்ளதாக, கர்நாடக மாநில முன்னாள் முதல்வரும், மதச் சார்பற்ற ஜனதாதளம் தலைவருமான எச்.டி. குமாரசாமி தெரிவித்துள்ளார். இது தொடர்பாக பெங்களூருவில் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் அவர் மேலும் கூறியிருப்பதாவது:

“நாட்டின் அரசுத் துறைகளில் ஆர்.எஸ்.எஸ். அமைப்பைச் சேர்ந்தவர்கள் உயர் பதவியில் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். இந்திய ஆட்சிப் பணிகளில் அந்த அமைப்பைச் சேர்ந்த 4 ஆயிரம் பேர் சேர்க்கப்பட்டுள்ளனர். ஆர்.எஸ்.எஸ். அமைப்பு ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். தேர்வில் வெற்றி பெற பயிற்சி அளிக்கிறது. கடந்த 2016ஆம் ஆண்டு மட்டும் ஆர்.எஸ்.எஸ். அமைப்பைச் சேர்ந்த 626 பேர் இந்திய ஆட்சிப் பணிகள் தேர்வில் வெற்றி பெற்றுள்ளனர். இந்த விஷயத்தைப் பொறுத்த வரை மக்களுக்கு சேவை செய்வது பா.ஜ.க.வின் எண்ணம் இல்லை. மாறாக, நாட்டை மனு தர்ம காலத்திற்கு எடுத்துச் செல்வதே அவர்களது எண்ணம். அதற்காகவே நாடு முழுவதும் உள்ள ஆர்.எஸ்.எஸ். தொண்டர்களுக்கு பயிற்சி அளித்து அவர்களை இந்திய ஆட்சிப் பணித் துறையில் அதிகாரிகளாக ஊடு ருவச் செய்து பாஜக தன்னுடைய திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. நாட்டில் உண்மையாக என்ன நடக்கிறது? என்பது மக்களுக்கு தெரியவில்லை. உண்மையை மூடி மறைத்தால், அது நாட்டிற்காக உயிர்த் தியாகம் செய்தவர்களை அவமதித்தது போன்றது ஆகும். மக்களுக்கு உண்மை தெரிய வேண்டும். உண்மையைச் சொல்ல எனக்கு எந்த தயக்கமோ, பயமோ இல்லை. நான் யாருக்கும் எதி ராகவோ அல்லது ஆதரவாகவோ இந்தக் கருத்தை கூறவில்லை. உண்மை பற்றி மக்கள் விவாதிக்க வேண்டும் என்பதே எனது விருப்பம். நான் எப்போதும் உண்மையின் பக்கமே இருக்கிறேன்”. இவ்வாறு குமாரசாமி கூறி யுள்ளார்

# மதுரையில் பொது மக்கள் – மாணவர்கள் பங்கேற்ற பெரியார் பிறந்த நாள் விழா

மதுரையில் எழுச்சியுடன் கொண்டாடப்பட்ட பெரியார் பிறந்த நாள் மதுரை புறநகர் மாவட்டம் சார்பில் மேலூர் பேருந்து நிலைய நுழைவு வாயிலில்




பெரியார் படம் கொண்ட பிரம்மாண்ட மேடை அமைக்கப்பட்டு 17.9.2021 ன்று சமூக நீதி நாள் கொண்டாடப்பட்டது.

இந்த நிகழ்விற்கு மேலூர் பொறுப்பாளர் சத்திய மூர்த்தி தலைமை தாங்கினார். திமுக மேலூர் நகர், தலைவர் யாசின், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தொகுதி செயலாளர் கண்ணன், விடுதலை சிறுத்தைகள் தொகுதி செயலாளர் அய்யாவு மற்றும் தமிழ் புலிகள் கட்சி, மே 17 இயக்கம் , இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தோழர்கள் பங்கேற்றனர்.

கல்லம்பட்டி, புலிப்பட்டி, மேலூர், கீழையூர் உள்ளிட்ட பகுதிகளிலிருந்து பொதுமக்கள், மாணவர்கள் 200க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.

கல்லம்பட்டி, புலிப்பட்டி கிளைக்கழகங்களில் பகுதி தோழர்களால் பெரியார் படம் வைத்து சமூக நீதி நாள் உறுதிமொழி எடுக்கப்பட்டது.

மதுரை மாநகர் சார்பில் சிம்மக்கல் பகுதி பொதுமக்கள் மற்றும் திவிக சார்பில் பெரியார் சமூக நீதி நாள் உறுதி மொழி எடுக்கப்பட்டது.


இந்த நிகழ்விற்கு மாநகர் தலைவர் காமாட்சி பாண்டி தலைமை தாங்கினார்.

பின்னர் மதுரை மாநகராட்சி சார்பில் அமைக்கப்பட்டிருந்த பெரியார் படத்திற்கு மதுரை மாவட்ட செயலாளர் மா.பா. மணி அமுதன் தலைமையில் தமிழ் தேச மக்கள் முன்னணி, மக்கள் அதிகாரம், தந்தை பெரியார் திராவிடர் கழகம், தமிழக வாழ்வுரிமை கட்சி, மே 17 இயக்கம், விடுதலை சிறுத்தைகள் கட்சி, பெண்கள் தமிழ்நாடு இணைப்புக் குழு, நாணல் நண்பர்கள் உள்ளிட்ட அமைப்புகள் பேரணியாக சென்று பெரியார் படத்திற்கு மரியாதை செலுத்தி சமூக நீதி நாள் உறுதி மொழி எடுக்கப்பட்டது.

நூற்றுக்கும் மேற்பட்ட தோழர்கள் இந்த நிகழ்வில் பங்கேற்றனர்.

மாவட்டத் தலைவர் திலீபன் செந்தில், மாளவிகா, பிரபாகரன், கருப்பையா, குமார், காளி, செந்தில் நாதன், மருது பாண்டி உள்ளிட்ட கழகத் தோழர்களும் கழகத்தின் புதிய ஆதரவாளர்களும் கலந்து கொண்டனர்.

## வாழ் நாள் முழுவதும் நான் தொண்டனே !



நான் மறைந்து நின்று சிலரை தூண்டிவிட்டு எந்தக் காரியத்தையும் செய்ய சம்மதிக்கமாட்டேன். ஒருசமயம் அப்படிச் செய்ய எனக்கு ஆசையிருந்தாலும் எனக்கு அந்தச் சக்தி கிடையாது. மறைவாய் இருந்து காரியம் செய்ய, சக்தியும் சில சவுகரியமும் வேண்டும். அந்த சக்தியும், சவுகரியமும் எனக்கில்லாததாலேயேதான், நான் என் வாழ்நாள் முழுவதும் தொண்டனாகவே இருந்து தீர வேண்டியதாய் இருக்கிறது என்பதோடு, எதையும் எனக்குத் தோன்றிய எண்ணங்களை வெளிப்படுத்தித் தாட்சண்யம் இல்லாமலும் கண்டிக்க வேண்டியவனாகவும் இருக்க வேண்டியிருக்கிறது.

**குடி அரசு – 24.11.1940**

## பிரிட்டிஷ் ஆட்சியிலிருந்து பா.ஜ.க. ஆட்சி வரை (11)

# ஆர்.எஸ்.எஸ். - பிரிட்டிஷ் ஆதரவு அவலங்களைக் கொண்ட நூலை வெளி வராமல் தடுத்த முரளி மனோகர் ஜோஷி

***பிரிட்டிஷ் ஆட்சியை எதிர்த்ததால் 'தேச பக்தர்கள்' என்று தேசபக்தி முத்திரைக் குத்திக் கொள்கிறார்கள், ஆர்.எஸ்.எஸ்.காரர்கள். அதே நேரத்தில் ஈ.வெ.ரா., பிரிட்டிஷாரை ஆதரித்த தேசத் துரோகி என்று எச். ராஜா போன்ற பார்ப்பனர்கள் பேசி வருகிறார்கள். பிரிட்டிஷ் ஆட்சிக்கும் ஆர்.எஸ்.எஸ்.க்கும் இருந்த நெருக்கமான உறவு தொடர்புகளை வரலாற்று ஆவணங்கள் பதிவு செய்திருக்கின்றன. கடந்த தொடரில் இது குறித்து பல வரலாற்று செய்திகளைப் பதிவு செய்துள்ளோம். வேறு சில முக்கிய வரலாற்று நிகழ்வுகள் இளைய தலை முறைக்கு வியப்பாக இருக்கும். மறைக்கப்படும் அந்த தகவல்கள் சிலவற்றை இந்தத் தொடரில் பதிவு செய்ய விரும்புகிறோம்.***

***1942இல் வெள்ளையனே வெளியேறு இயக்கத்தை காங்கிரஸ் நடத்தியபோது பிரிட்டிஷாரை ஆதரித்தது அன்றைய சாவர்க்கரும் ஆர்.எஸ்.எஸ்.சும் என்பதை கடந்த தொடர்களில் சுட்டிக்காட்டியிருந்தோம்.***

இது குறித்து விரிவான ஆய்வு செய்த ஆண்டர்சன் மற்றும் பாம்லே ஆகியோர் பிரிட்டிஷ் ஆவணங்களிலிருந்தே ஆதாரங்களைப் பதிவு செய்துள்ளார். (ஆதாரம்: ஏ.ஜி. நூராணி எழுதிய ஆர்.எஸ்.எஸ். நூல்)

- வெள்ளையனே வெளியேறு இயக்கத்தை காங்கிரஸ் அறிவித்தபோது சாவர்க்கர் (ஆர்.எஸ்.எஸ். தத்துவார்த்த தந்தை - காந்தி கொலை வழக்கில் குற்றம்சாட்டப்பட்டு நீதிமன்றத்தில் விடுதலை செய்யப்பட்டவர்). பிரிட்டிஷ் வைஸ்ராய் லின்லித் கோ (Linlith Gow) என்பவரை 1939, அக்.2ஆம் தேதி நேரில் சந்தித்து, நாங்கள் காங்கிரஸ் போராட்டத்தை ஆதரிக்க வில்லை. பிரிட்டிஷ் ஆட்சிக்கே ஆதரவு தருகிறோம் என்று அறிவித்தார். அப்போது பல மாகாணங்களில் பொறுப்புகளில் இருந்த காங்கிரஸ் கட்சியினர் தங்கள் அமைச்சர் பதவிகளை இராஜினாமா செய்தார்கள்.
- சாவர்க்கர் மட்டுமல்ல, சங்கிகளின்முன்னோடி தலைவரும் பாஜகவின் முன்னோடி அமைப்பான ஜனசங்கத்தை உருவாக்கியவர்களில் ஒருவரான ஷியாம் பிரசாத் முகர்ஜி (வங்காள பார்ப்பனர்) பிரிட்டிஷ் ஆதரவு நிலைப்பாட்டையே எடுத்தார். காங்கிரசார், வெள்ளையனே வெளியேறு இயக்கத்தை ஆதரிக்க மாட்டோம் என்று வாக்குறுதியளித்தார். இது குறித்து ஆவணங்களோடு ஆய்வு செய்து வெளி வந்த ஒரு நூலை வாஜ்பாய் பிரதமராக இருந்தபோது மனித வளத் துறை அமைச்சராக இருந்த பா.ஜ.க.வின் முரளி மனோகர் ஜோஷி தடை செய்து விட்டார். காந்தி குப்தா என்பவர் ஆய்வு செய்து வெளியிட்ட அந்த நூலின் பெயர் "சுதந்திரத்தை நோக்கி... இந்தியாவின் சுதந்திர இயக்கத்துக்கான ஆவணங்கள் '1943-1944' என்பதாகும். மூன்று பகுதிகளாக ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகம் இதை வெளியிட்டது. ஆவணக் காப்பகத்தில் இந்த நூலைக் கண்டுபிடித்த ஏ.ஜி.நூராணி, வரலாற்று உண்மைகளை வெளிப்படுத்தியிருக்கிறார்.

ஜன சங்கத்தை நிறுவியவரான ஷியாம் பிரசாத் முகர்ஜி, வங்காள மாகாண அமைச்சரவையில் இடம் பெற்றிருந்தார். அம்மாகாணத்தின் முதல்வர் ஏ.கே. பல்வுல் ஹக். அவர், இந்திய பரனியன் முஸ்லிம் லீக் ஆட்சியின் பிரதிநிதி. இதே வங்காள மாகாண சட்டமன்றம், பாகிஸ்தான் பிரிவினையை ஆதரித்து, தீர்மானத்தை நிறைவேற்றியது. முகர்ஜி - பாகிஸ்தானில் அடங்கியுள்ள சிந்து மாககாணத்தின் பிரதிநிதியாக அமைச்சரவையில் இடம் பெற்றிருந்தவர். எனவே, இஸ்லாமிய ஆதரவு நிலைப்பாட்டை தனது அமைச்சர் பதவி வாய்ப்புக்காக எடுத்ததோடு, பாகிஸ்தான் பிரிய வேண்டும் என்ற தீர்மானத்தையும் ஆதரித்தார். பிறகு வங்காள கவர்னர் சர். ஜான்ஹர்பர்ட்டை 1942 ஜூலை 26இல் சந்தித்து ஒரு மனுவை அளித்தார். காங்கிரசின் "வெள்ளையனே வெளியேறு" இயக்கத்தை இரும்புக் கரம் கொண்டு ஒடுக்க வேண்டும். எங்களுடைய வங்காளத்தில் அப்படி ஒடுக்கிக் காட்டுவோம்; அதற்கான நிர்வாக ஏற்பாடுகளை சிறப்பாக செய்து வைத்துள்ளோம்" என்று பிரிட்டிஷ் ஆளுநருக்கு ஆலோசனை கூறினார். (Advising him to crush the revolt)

**விடுதலை இராசேந்திரன்**

அதற்குப் பிறகு முகர்ஜி பம்பாயில் ஜின்னாவை சந்தித்தார். மூன்று மணி நேரம் இருவரும் பேசினார்கள். இறுதியாக சாவர்க்கரை, வீர சாவர்க்கர் என்று கொண்டாடும் சங்கிகளின் வரலாற்றுப் புரட்டுகளை அம்பலப்படுத்தும் செய்திகளோடு இந்தப் பகுதியை நிறைவு செய்வோம்.

சாவர்க்கர் ஏன் கைது செய்யப்பட்டார்?

1909 ஜூலை முதல் தேதி இலண்டனில் உள்ள இம்பீரியல் இன்ஸ்டிடியூட்டுக்கு ஒரு நிகழ்ச்சிக்காக அதிகாரி வில்லி வந்தார். திங்காராவும் அங்கே மேலை நாட்டு உடையோடு வந்திருந்தான். திங்காராவின் தந்தையும் வில்லியும் நண்பர்கள். எனவே திங்காராவை - கர்சானுக்கு ஏற்கனவே தெரியும். திங்காராவைப் பார்த்தவுடன், "ஓ, மைடியர்..... யு ஆர் ஹியர்" என்று கூறிக்கொண்டு, கர்சான், திங்காராவிடம் மகிழ்ச்சியோடு கைகுலுக்க வந்தார். திங்காரா மறைத்து வைத்திருந்த கைத்துப்பாக்கியை எடுத்து, கர்சானை நோக்கி 5 குண்டுகள் சுட்டான். கர்சான் இரத்த வெள்ளத்தில் பிணமானார். கர்சானைக் காப்பாற்ற ஓடி வந்த டாக்டர் கோவாஸ்லால் காகா என்பவரும், குண்டு பாய்ந்து இறந்தார். கர்சான் பங்கேற்க வந்தது, தேசிய இந்தியக் கழகத்தின் ஆண்டு விழா நிகழ்ச்சி. அதே ஆண்டு டிசம்பர் மாதம் பாபாராவுக்கு (சாவர்க்கரின் அண்ணன்) தண்டனை விதித்தார் என்று நாசிக் மாவட்ட ஆட்சித் தலைவராகவும், நாசிக் மாவட்ட நீதிபதியாகவுமிருந்த எம்.டி. ஜாக்சனும் சுட்டுக் கொல்லப்பட்டார். ஜாக்சன், தியேட்டர் ஒன்றில் பிரபல மராத்தி நாடகமான 'ஷாரதா' எனும் நாடகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தபோது ஆனந்த் கான்கரே எனும் சாவர்க்கரின் தீவிர சீடன் அவரை சுட்டுக் கொன்றான். இத்தனைக்கும் ஜாக்சன், பாபாராவுக்கு நேரடியாகத் தண்டனை தரவும் இல்லை; தன்னிடம் விசாரணைக்கு வந்த இந்த வழக்கை மேல் நீதிமன்ற விசாரணைக்கு அனுப்பி விட்டார். ஜாக்சன் பிரிட்டிஷ்காரராக இருந்தாலும், சமஸ்கிருதத்தில் ஆழ்ந்த புலமை மிக்கவர். இந்தியர் களையும், இந்திய இலக்கியங்களையும் மிகவும் நேசித்தவர். இலக்கிய வட்டங்களுடனேயே நெருக்கமாக இருந்தவர், இலக்கியக் கூட்டங்களில் பேசுவதிலும் எழுதுவதிலும், மிகவும் ஈடுபாடு காட்டியவர். இந்து மகாசபைத் தலைவர்களில் ஒருவரான எம். ஆர். ஜெயகர் கூட, ஜாக்சனை மிகவும் புகழ்ந்து எழுதியிருக்கிறார். இந்த இரண்டு கொலைகளிலும், சாவர்க்கரின் பங்கு என்ன? சாவர்க்கரின் புகழ் பாடி - அவரது சுயசரிதையை எழுதியுள்ள தனஞ்செய்கீர் இதுபற்றி - இவ்வாறு குறிப்பிடுகிறார்.

- *ஜன சங்கத்தை நிறுவிய ஷியாம் பிரசாத் முகர்ஜி, முஸ்லிம் லீக் தலைமையில் இருந்தவர்களை அமைச்சரவையில் இடம் பெற்று பாகிஸ்தான் பிரிவினை தீர்மானத்தை ஆதரித்தார்.*
- *சங்கிகள் போராட்டத்தை இரும்புக் கரம் கொண்டு ஒடுக்க வேண்டும் என்று பிரிட்டிஷ் ஆளுநரிடம் மனு கொடுத்தார் அமைச்சராக இருந்த முகர்ஜி.*
- *பிரிட்டிஷ் ஆட்சிக்கு சங்கிகள் ஆதரவு தந்த வரலாற்றை ஆவணங்களுடன் வெளிப்படுத்திய நூலை முரளி மனோகர் ஜோஷி தடை செய்தார்.*
- *சாவர்க்கர் பிரிட்டிஷ் ஆட்சியில் தனது விடுதலைக்காக பல முறை மன்னிப்புக் கேட்டார்.*

"திங்காரா - சாவர்க்கரிடம், தன்னை ஒப்படைத்துக் கொண்ட சீடன் - வில்லியைக் கொலை செய்வதற்கு சில நாட்களுக்கு முன் திங்காரா, தனது தலைவர் சாவர்க்கரிடம் கேட்டான், 'உண்மையிலேயே நான் வீரத் தியாகம் புரியும் நேரம் நெருங்கி விட்டதா?' என்று; உடனே தயக்கம் எதுவுமின்றி - உறுதியான குரலில் சாவர்க்கரிடமிருந்து பதில் வந்தது. வீரத்தியாகத்துக்கு உறுதி பூண்டு செய்து முடிக்க எப்போது ஒருவன் தயாராகி விட்டானோ, அப்போதே அவன் வீரத்தியாகிதான்; அவனுக்கு வீரத்தியாகப் பட்டம் வந்தே தீரும்... முன்னாள் இந்திய வைஸ்ராய் கர்சானைத்தான் உடனடியாக திங்காரா குறிவைத்தான்" என்று எழுதுகிறார் கீர்! தனஞ்செய்கீர் எழுதிய வீரசாவர்க்கர் நூல் - பக். 49)

"இந்தக் கொலைக்குத் திட்டமிட்டது நான்தான், என்று தனது சுயசரிதையை எழுதிய தனஞ்செய்கீர் இடம் சாவர்க்கர் முழு உரிமை கொண்டாடினார். இதை கீர் என்னிடம் தெரிவித்தார். திங்காரா விடம், சாவர்க்கர் நிக்கல் முலாம் பூசப்பட்ட ஒரு துப்பாக்கியைக் கொடுத்து, இம்முறை நீ தோற்று விட்டால் பிறகு என் முகத்திலே முழிக்காதே (Don't show me your face. if you fail this time) என்று கூறினார். இலண்டன் போலீஸ் இந்தக் கொலையில் சாவர்க்கருக்குத் தொடர்பு உண்டு என்று உறுதியாக நம்பியது. ஆனால் சாட்சியங்கள் கிடைக்கவில்லை.

இறுதியாக, நாசிக் நீதிபதி கொலை வழக்கில் சதித்திட்டம் தீட்டியதாக சாவர்க்கர் குற்றம் சாட்டப்பட்டு அந்தமான் சிறையில் ஆயுள் கைதியாக்கப்பட்டார். கார்சன் வில்லி, ஜாக்சன் கொலைகளுக்கு சாவர்க்கர்தான் காரணம்" - என்று எழுதுகிறார் ராபர்ட்பைன்.

விசாரணை முடிவில் தூக்குத் தண்டனை விதிப்பட்ட திங்காரா தனது கொலையை நியாயப்படுத்தி, சவால் அறிக்கை விடுத்தான்.

அதில், **"என் தேசகாரியம், ஸ்ரீராமனின் காரியம்; என் தேச சேவை, நீ கிருஷ்ண பராமாத்மாவுக்குச் செய்யும் சேவை"** என்றான்.

தீவிரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டதாக - சாவர்க்கரின் சகோதரர் பாபாராவ் கைது செய்யப்பட்டு, அந்தமான் சிறையில் அடைக்கப்பட்டார். சாவர்க்கரை தேடப்படும் குற்றவாளியாக அரசு அறிவிக்கவே - இலண்டனில் உள்ள விக்டோரியா இரயில் நிலையத்தில் 1910இல் சாவர்க்கர் கைது செய்யப்பட்டார்.

அந்தமான் சிறைக்கு கப்பலில் கொண்டு போகப்படும்போது, மார்செ என்ற ஊரில் நங்கூரம் பாய்ச்சி நின்ற போது, கப்பலிலிருந்து குதித்து, கடலில் நீந்தி, பிரஞ்சு நாட்டில் அடைக்கலம் தேடிச் சென்ற சாவர்க்கர் - அங்கு கைது செய்யப்பட்டு, மீண்டும் 1911 ஜூலை 4ஆம் தேதி அந்தமான் கொண்டு வரப்பட்டார். மேற்குறிப்பிட்ட இரண்டு கொலைகளுக்கும் சேர்த்து 50 ஆண்டுகள் தண்டனை வழங்கப்பட்டது. அந்தமான் சிறையில் - சாவர்க்கர் என்ன செய்தார்? சிறைக்கு வந்த அடுத்த சில மாதங்களிலேயே - பிரிட்டிஷ் அரசிடம் தனது விடுதலைக்கு கருணை மனு போடத் துவங்கி விட்டார். மற்றவர் களைத் தூண்டிவிட்டு, படுகொலைகளைச் செய்யச் சொல்லி விட்டு, தனக்கு எந்த ஆபத்தும் வராமல் காத்துக் கொள்வதும், தண்டிக்கப்பட்டு விட்டால், அரசிடம் கருணை மனு போடுவதும் சாவர்க்கரின் 'பண்பாக' இருந்திருக்கிறது என்று, ஆய்வாளர் ஏ.ஜி.நூரனி குறிப்பிடுகிறார். பிரிட்டிஷ் அரசிடம், முதலில் அவர் சமர்ப்பித்த இரண்டு கருணை மனுக்கள் பற்றிய தகவலை அவர் இரகசியமாகவே வைத்திருந்தார். சிறையில் உடனிருந்த தனது சகோதரரிடம் கூட இதைத் தெரிவிக்கவில்லை. இதே அந்தமான் சிறையில், சாவர்க்கர் இருந்தபோது, எவ்வளவோ அரசியல் கைதிகள், தண்டிக்கப்பட்டு சிறைக்குள்ளே வாடி வந்தார்கள். அவர்களில் யாரும், தன்னை மன்னித்து விடுதலை செய்யுமாறு, பிரிட்டிஷாரிடம் கருணைமனு போடவில்லை ஆனால், வீர சாவர்க்கர் தொடர்ந்து மன்னிப்பு மனுக்களைப் போட்டுக் கொண்டே இருந்தார்.

"நான் பிரிட்டிஷ் அரசுக்கு எநத வகையிலும் சேவை செய்யக் காத்திருக்கின்றேன்" (I am ready to serve the Government in any capacity they like) என்று 1913 அக்டோபரில் வைஸ்ராய்க்கு எழுதிய கடிதத்தில் 'வீரத்துடன்' பதிவிட்டார். பெரியார், தன் மீது தேசத் துரோக சட்டம் பாய்ந்தபோது எந்தத் தண்டனையையும் ஏற்கத் தயார் என்று கூறி எதிர் வழக்காடவே மறுத்தவர்.


"அரசியல் சட்டத்துக்கு விசுவாசமாக இருப்பேன்; பார்ப்பன ஆட்சிக்கு எனது முழு சக்தியையும் பயன்படுத்தும் நேர்மையாளனாக இருப்பேன்; இத்தகைய ஒரு பேரரசு எனது இதயத்தில் ஆழமாகப் பதிந்து மதிப்போடு உயர்ந்து விட்டது" என்ற எல்லையே 'வீர' சாவர்க்கார் மன்னிப்புக் கடிதம் 'பிரிட்டிஷ் தேச பக்தியை' வெளிப்படுத்தியது.

இறுதியாக 1980, ஜூலை 13ஆம் தேதி தலைமை நீதிபதி எம்.சி. சக்ளா மற்றும் நீதிபதி பி.பி.கஜேந்திர கட்கர் முன்னிலையில் சாவர்க்கர் "இனி எதிர்காலத்தில் எந்த அரசியல் நிகழ்விலும் ஈடபட மாட்டேன்; பம்பாய் வீட்டிலிருந்து வெளியேற மாட்டேன்" என்று உறுதி தந்ததோடு, இந்து மகாசபைத் தலைவர் பதவியிலிருந்தும் விலகினார். இறுதி வரை அரசியலிலிருந்து ஒதுங்கி வாழ்ந்தவர் என்பதே 'வீர சாவர்க்கர்' வீர வரலாற்றின் பதிவான இருந்தது. (நிறைவு)

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/19-21 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2019-2021
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

## ஆதாரங்களோடு விளக்குகிறார், வாலாஜா வல்லவன் (2)

# தமிழறிஞர்களை பெரியாருக்கு எதிராக நிறுத்துவது ஏன்?



*19.9.2021 அன்று ‘தமிழ்த் தேச நடுவம்’ நடத்திய சென்னை கருத்தரங்கில் பெ. மணியரசன், சீமான் போன்ற ‘தமிழ்த்தேசிய’ உரிமையாளர்களாக வலம் வருவோரின் திராவிட எதிர்ப்பு கருத்துகளுக்கு வரலாற்றுத் தகவல்களோடு மார்க்சிய பெரியாரிய பொதுவுடைமைக் கட்சியின் தோழரும் பெரியாரிய ஆய்வாளருமான வாலாஜா வல்லவன் நிகழ்த்திய உரையின் கருத்தை கடந்த இதழில் வெளியிட்டோம். உரையின் இறுதி பகுதி இது.*

**பெரியார் பேசிய திராவிட நாடு - எது? திராவிடம் பேசிய பெரியார், தமிழ்நாட்டுக்கு கேடு விளைவித்தார் என்று சில தமிழ் தேசியர்கள் கூறுவது சரியா?**

- உண்மைக்கு மாறான புரட்டுவாதம். பெல்லாரி சிறையிலிருந்து விடுதலையான பெரியார், விடுதலையான பிறகு சென்னையிலுள்ள அண்ணாமலை (செட்டியார்) மாளிகையில் நீதிக்கட்சி நிர்வாகக் குழு கூடியது. பெரியார் கலந்து கொண்டார். சென்னை மாகாணத்திலிருந்த நீதிக்கட்சித் தலைவர்கள், ‘தமிழ்நாடு தமிழருக்கே’ என்ற முழக்கம் வைத்தால் எங்களைப் போன்ற சென்னை மாகாணத்தில் அடங்கியுள்ள ஆந்திரா, கேரளாவைச் சார்ந்தவர்கள் நிலை என்னாவது என்ற கேள்வி எழுப்பினார்கள். நீதிக்கட்சி செயற்குழுவே, ‘திராவிட நாடு’ என்ற கோரிக்கையை முன் வைத்து தீர்மானம் நிறைவேற்றியது. இது நடந்தது 1939 ஆம் ஆண்டில் மொழிவாரி மாநிலங்கள் அப்போது பிரிக்கப்படவில்லை.
- பிறகு 1949இல் ‘குடிஅரசு’ பத்திரிகையில் மே மாதம், திராவிட நாட்டுக்கான அரசியல் சட்டத்தை விளக்கி, பெரியார் 3 வாரம் தொடர் கட்டுரைகளை எழுதினார். அதில் திராவிட நாடு வடநாட்டிலிருந்து துண்டித்துக் கொள்ள வேண்டும். திராவிட நாட்டில் அடங்கியுள்ள நான்கு நாடுகளும் கூட்டாட்சியாக அமைத்துக் கொள்ள வேண்டும். பொது மொழியாக ஆங்கிலத்தை வைத்துக் கொள்ள வேண்டும். நான்கு நாடுகளில் எந்த நாடாவது பிரிந்து செல்ல விரும்பினால் பிரிந்து கொள்ளலாம் என்று திராவிட நாட்டுக்கான அரசியல் சட்டத்தை பெரியார் முன்மொழிந்தார்.
- 1956 நவம்பர் முதல் தேதி (1.11.1956), மொழி வழி மாநிலங்கள்உருவாகின்றன. அடுத்த நான்கு நாட்களிலேயே நவம்பர் 5ஆம் தேதி பெரியார், திருச்சியில் திராவிடர் கழக மத்தியக் குழுக் கூட்டத்தைக் கூட்டி, இனி திராவிட நாடு இல்லை; தமிழ்நாடு விடுதலை தான் என்று அறிவித்தார். தனித் தமிழ்நாடே நமது இலட்சியம் என்று அறிவித்து, கைகளில் பச்சைக் குத்திக் கொள்ளுங்கள் என்றார். 1956 முதல் அவர் 1973 டிசம்பரில் பேசிய தியாகராயர் நகர் வாழ்க்கை யின் கடைசி கூட்டம் வரை (19.12.1973) அவர் தமிழ்நாடு தமிழருக்கே என்று தான் பேசினார்.
- 1960இல் பெரியார் ‘சுதந்திர தமிழ்நாடு ஏன்?’ என்ற நூலையே எழுதி வெளியிட்டார். எந்தத் தமிழ்த் தேசியவாதியாவது இப்படி ஒரு நூலை இந்தத் தலைப்போடு வெளியிட்டது உண்டா?

**மறைமலை அடிகள், ம.பொ.சி., அண்ணல் தங்கோ போன்ற தலைவர்கள் தான் தமிழ்த் தேசியத்தை முன்னெடுத்தவர்கள். பெரியார், தமிழ்த் தேசிய உணர்வை சிதைத்தார், திராவிடத்தைத் தூக்கிப் பிடித்தார் என்று மணியரசன், சீமான் போன்றவர்கள் உயர்த்திப் பிடிப்பது சரியா?**

- 1925இல் பனகல் அரசர் முதல்வராக இருந்தபோது, தமிழ்ப் பல்கலைக் கழகம் உருவாக்க குழு ஒன்றை அமைத்தார். அறநிலையத் துறைச் சட்டத்தை அவர் கடும் எதிர்ப்புக்கிடையே கொண்டு வந்தார். பார்ப்பனர்கள் கடுமையாக எதிர்த்தனர். சட்டம் கொண்டு வந்தவுடன் திருப்பதி ஏழுமலையான் கோயிலில் கூடுதலாக இருந்த ரூ.4.0 இலட்சம் ரூபாய் நிதியை எடுத்து மாகாண அரசு சார்பில் பாதி நிதியை ஒதுக்கீடு செய்து தெலுங்கு பல்கலைக்கழகத்தை உருவாக்கினார். தமிழ் மடாதிபதிகள், தமிழ் பல்கலைக்கழகத்துக்கு நிதி உதவி வழங்கினால் அரசு நிதியும் பங்களிப்புமாக வழங்கி தமிழ்ப் பல்கலைக்கழகத்தை உருவாக்க எதிர்பார்த்திருந்தார்; ஆனால் எவரும் முன் வரவில்லை. பனகல் அரசர் கொண்டு வந்த அறநிலையத் துறைச் சட்டத்துக்கு வரலாற்றிலே இல்லாத அளவுக்கு 800 திருத்தங்களைக் கொண்டு வந்தனர். காங்கிரஸ் தலைவர் சத்தியமூர்த்தி பார்ப்பனர் மட்டும் 425 திருத்தங்களைக் கொண்டு வந்தார். 1925இல் மூன்று ஆண்டு விவாதத்துக்குப் பிறகு தான் அறநிலையத் துறைச் சட்டம் நிறைவேறியது. 1928இல் சுப்பராயன் தலைமையிலான அமைச்சரவை அமைந்த போதும் தமிழ்ப் பல்கலைக்கழகம் அமைப்பதை எதிர்த்து, மறைமலை அடிகள் கடிதம் எழுதினார் என்பது வரலாறு. சென்னை பல்கலைக்கழகம் மட்டுமே போதும் என்று கூறினார். ‘மெயில்’ ஏடு வெளியயிட்ட அந்தக் கடிதத்தை நம்பியூரான் தனது ஆய்வில் பின் இணைப்பாக இணைத்துள்ளார். பெரியார் தமிழ்ப் பல்கலைக்கழகம் அமைக்க வேண்டும் என்று வலியுறுத்தினார். பெரியார் எதிர்ப்பு தெரிவித்திருந்தால், மணியரசன் போன்றவர்கள் பெரியாருக்கு எதிராக எப்படி துள்ளிக் குதித்திருப்பார்கள்? எப்படி நெருப்பைக் கக்கியிருப்பார்கள். ‘கன்னடர்’ என்பதால் எதிர்த்தார் என்று குற்றக் கூண்டில் நிறுத்தியிருப்பார்கள்.
- அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் உரையாற்றிய மறைமலை அடிகளாரிடம், ஒரு மாணவர் திராவிடம் என்பது எது என்று கேள்வி கேட்டார். அதற்கு பதிலளித்த மறைமலையடிகள், இந்தியாவில் வடமேற்கு பகுதியிலுள்ள ‘ஆரியவர்த்தம்’ என்ற சிறு பகுதியைத் தவிர, இந்தியா முழுதுமே திராவிடம் தான் என்று பதிலளித்தார். மறைமலை அடிகளார் வரலாற்றை எழுதிய அவரது மகன் மறை. திருநாவுக்கரசு இதை அவரது நூலில் பதிவு செய்துள்ளார். இந்தியா முழுதுமே திராவிடம் தான் என்று மறைமலையடிகள் தன்னை ‘இந்து - சைவர்’ என்றே கூறிக் கொண்டார். ‘இந்து - இந்தியாவை’ எதிர்த்து ஒரு வரி கூட அவர் எழுதியதில்லை. இவர் தான் தமிழ்த் தேசியத்தை வளர்த்தெடுத்ததாகக் கூறுகிறார்கள். பெரியாருக்கு எதிராக மறைமலையடிகளை நிறுத்தி, பெரியாரை சிறுமைப்படுத்துவதே அவரது நோக்கம்!

**அயோத்திதாசர் பற்றிய தவறான தகவல்**

அயோத்திதாசர் மக்கள் தொகைக் கணக்கெடுப்பில தமிழர் என்றே பதிவு செய்ய வேண்டும் என்று கூறியதாக தவறான தகவலை பெ. மணியரசன் கூறி வருகிறார். தனது இறுதிக் காலமான 1914 வரை ‘ஆதி திராவிட மகாஜன சபை’யைத் தான் அயோத்திதாசர் நடத்தி வந்தார். மக்கள் தொகைக் கணக்கெடுப்பில் ‘பூர்வீக திராவிடன்’ என்று பதிவு செய்ய வேண்டும் என்று தான் கூறினாரே தவிர, தமிழன் என்று பதிவு செய்யச் சொன்னதாக ‘பெ.ம.’ கூறுவது சுத்தப் பொய். அலோஷியஸ் தொகுத்த அயோத்திதாசர் எழுத்து தொகுப்பில் பக்.315, 316இல் இது பதிவாகியிருக்கிறது.

**ம.பொ.சி. யார்?**

தமிழ் தேசியர்கள் தூக்கிப் பிடிக்கும் ம.பொ.சி.யின் வரலாறு என்ன? அவர் நடத்திய வார இதழான ‘செங்கோல்’ பத்திரிகையின் 6000 பக்கங்களையும் நான் படித்து முடித்து விட்டேன்.

1. விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரனை சந்திக்க தாம் ஏற்பாடு செய்வதாக முதல்வராக இருந்த எம்.ஜி.ஆர்., ம.பொ.சி.யிடம் கேட்டபோது சந்திக்க மறுத்தவர் ம.பொ.சி. “நான் ஒரு காந்தியவாதி. உலகில் எந்த ஒரு இயக்கமும் வன்முறையில் ஈடுபடுவதை நான் விரும்பவில்லை. விடுதலப் புலிகள் இயக்கம் ஒரு பயங்கரவாத இயக்கம்” என்று ‘ஈழமும் நானும்’ என்ற நூலில் ம.பொ.சி.யே பதிவு செய்திருக்கிறார்.
2. ம.பொ.சி.யின் தமிழரசுக் கழகம், பெரியார் இயக்கத்தை நீர்த்துப் போகச் செய்வதற்காக பார்ப்பனர்களும் காங்கிரசாரும் சேர்ந்து உருவாக்கிய அமைப்பு தான் 1946இல் உருவான அந்த அமைப்பு, 1954 வரை காங்கிரசுக்குள் தான் செயல்பட்டது. காங்கிரசுக்குள்ளேயே கடும் எதிர்ப்பு வந்ததால், அவர் வெளியேறினார். அப்போதுகூட நேருவிடம் சென்று தங்களை வெளியேற்ற வேண்டாம் என்று மன்றாடிப் பார்த்தார். பெ. மணியரசன் பார்வையில் இவர் உண்மையான தமிழ் தேசியவாதியாம்.

- மொழி வழி மாநிலப் பிரிவினைக் குழு பி.ஜி.கர் தலைமையில் 1956, ஜன.11இல் சாட்சியமளித்த ம.பொ.சி. என்ன கூறினார்?

இந்தியாவுக்கு இந்தியே ஆட்சி மொழியாக இருக்க வேண்டும். நிர்வாக மொழியாகவும் தொடர்பு மொழியாகவும் இந்தியே இருக்க வேண்டும். உச்சநீதிமன்றத்திலும் இந்தி மொழியையே பயன்படுத்த வேண்டும். இயன்றால் நாடாளுமன்றத்திலும் இந்தியைப் பயன்படுத்தலாம். உறுப்பினர்கள் பேசுவதற்கு மட்டும் தாய்மொழியை அனுமதித்தால் போதும். இது தான் ம.பொ.சி. அளித்த சாட்சியம். தமிழ்நாட்டுப் பள்ளிகளில் விருப்பப் பாடமாக இந்தி இருக்கலாம் என்றார். 15.1.1956 ‘செங்கோல்’ இதழில் இந்தப் பதிவு உள்ளது.

நாவலர் சோமசுந்தர பாரதியார் தான் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்தவர். பெரியார் அதில் இடையில் வந்து இணைந்து கொண்டார் என்கிறார் பெ. மணியரசன்.

1. 1938இல் சென்னை கடற்கரையில் ஒன்றரை இலட்சம் மக்ககள் திரண்ட இந்தி எதிர்ப்பு கூட்டத்திற்குத் தலைமை தாங்கிய நாவலர் சோமசுந்தர பாரதியார், பெரியாரிடம் மன்னிப்புக் கோரினார். சைவத்தின் பெயரால் தங்களுக்கு தொல்லைக் கொடுத்து விட்டேன். மன்னிக்க வேண்டும் என்று சொன்னவர். இப்போதும் ஒரு காங்கிரஸ்காரராகவே இந்தித் திணிப்பை எதிர்க்கிறேன் என்றார். 17.9.1938 ‘விடுதலை’யில் இது பதிவாகியிருக்கிறது. நாவலர் எம்.ஏ, பி.எல்., படித்து விட்டு, அண்ணாமலைப் பல்கலையில் தமிழ்த் துறை தலைவராக இருந்தவர். எட்டயபுரம் மன்னர் கொடையாக வழங்கிய 400 ஏக்கர் நிலத்தை ஏற்க மறுத்தவர். அவரது குடும்பத்தில் 6 பேர் சுதந்திரப் போராட்டத்தில் பங்கேற்றனர். பாரதியைத் தெரிந்த தமிழர்களுக்கு நாவலரின் இந்த தியாக வரலாறு தெரியுமா?
2. 1948இல் அவநாசிலிங்கம் (செட்டியார்), கல்வி அமைச்சராக இருந்தபோது இந்தியைத் திணித்தபோது பெரியார் எதிர்த்துப் போராடினார். அப்போது நாவலர் பாரதியாரையும் போராட்டக் களத்துக்கு அழைத்தபோது வரமறுத்து விட்டார். நாம் சுதந்திரம் பெற்று விட்டோம்; எனவே இந்தியை தேசிய மொழியாக ஏற்றுக் கொண்டு விட்டேன்; இந்தித் திணிப்பைத்தான் நான் எதிர்த்தேன் என்று கூறி விட்டார்.
3. பெரியார் திராவிடம் என்று பெயர் சூட்டியதை எதிர்த்து தமிழர் கழகம் என்று பெயர் சூட்ட வலியுறுத்தினார் கி.ஆ.பெ. எனவே வெளியேறினார் என்று பெ.மணியரசன் கூற்று பச்சைப் பொய். ‘தமிழ்நாடு நீதிக் கட்சி’ என்று பெயர் சூட்ட வேண்டும் என்றே அவர் கேட்டதாக கி.ஆ.பெ.யை பேட்டி கண்டு, ‘எம்.ஃபில்.’ பட்டத்துக்கு ஆய்வு செய்த மணிமேகலை பதிவு செய்துள்ளார்; தமிழர் கழகம் என்று அப்போது கூறவில்லை; அதற்கு பல ஆண்டுகள் கழித்து ‘தமிழர் கழகம்’ உருவாக்கி, பிறகு ‘மூடு விழா’ நடத்தி விட்டார்.
4. ஒரு சில தமிழ்ச் தேசியர்கள் குற்றம்சாட்டுவதுபோல ‘திராவிடர் கழகம்’ என்ற பெயர் சூட்டல் ஒரே நாளில் எடுத்த முடிவு அல்ல; 1943ஆம் ஆண்டிலிருந்தே பல ஊர்களில் கழக அமைபபுகளோடு விவாதிக்கப்பட்டு எடுத்த முடிவு.

காலையில் தமிழர் கழகம் என்று பெயர் சூட்ட முடிவெடுத்து, மாலையில் பெரியார் முடிவை மாற்றிக் கெண்டார் என்பது பச்சைப் பொய்.

(நிறைவு)

தொகுப்பு: இராசேந்திரன்

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 14th October 2021

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN